பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

15 05 2024 7 15

புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மக்களவைத் தேர்தலில் 7வது கட்ட வாக்குப்பதிவுக்கான வேட்புமனுக்கள் பரிசீலனை இன்று நடைபெறுகிறது.

2. ஆப்பிரிக்காவின் வளர்ச்சிப் பணிகளுக்கான இந்தியா – அமெரிக்கா இடையிலான பேச்சுவார்த்தை வாஷிங்டனில் நடைபெற்றது.

3. மாணவர்களின் செயல்திறனை ஊக்குவிக்கும் **India Skills** திறன் போட்டிகள் இன்று புதுதில்லியில் தொடங்குகிறது.

4. சத்தீஸ்கர் மாநிலம் **Bijapur** மாவட்டத்தில் 30 மாவோயிஸ்ட்கள் ஆயுதங்களை ஒப்படைத்து பாதுகாப்புப் படையினரிடம் சரணடைந்தனர்.

5. **Elorda** கோப்பைக்கான குத்துச்சண்டைப் போட்டியில் இந்தியாவின் கவுரவ் சௌஹான் அரை இறுதிக்கு முன்னேறியுள்ளார்.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

மக்களவைத் தேர்தலில் 7வது கட்ட வாக்குப்பதிவுக்கான வேட்புமனுக்கள் பரிசீலனை இன்று நடைபெறுகிறது.

7 மாநிலங்கள் மற்றும் ஒரு யூனியன்பிரதேசத்தைச் சேர்ந்த 57 மக்களவைத் தொகுதிகளில் அடுத்த மாதம் ஒன்றாம் தேதி நடைபெற உள்ள 7வது கட்ட வாக்குப்பதிவுக்கான வேட்புமனு தாக்கல் நேற்று நிறைவடைந்ததை அடுத்து இன்று மனுக்கள் பரிசீலனை நடைபெறுகிறது.

நாளை மறுநாள் மனுக்களை திரும்பப்பெற கடைசி நாளாகும்.

<<<<>>>>

மக்களவைத் தேர்தலில் நான்கு கட்டங்களுக்கான வாக்குப்பதிவு முடிவடைந்த நிலையில், இதர மூன்று கட்டங்களுக்கான பிரச்சாரம் விறுவிறுப்படைந்துள்ளது.

அரசியல் கட்சித் தலைவர்களும், வேட்பாளர்களும் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி ஜார்கண்ட் மாநிலத்தில் **Kodirma** மற்றும் **Giridih** ஆகிய இடங்களில் பிரச்சாரம் மேற்கொண்டார்.

வலுவான அரசால் மட்டுமே மக்கள் நலத் திட்டங்களை சிறப்பாக செய்ய முடியும் என்று அவர் கூறினார்.

கடந்த 10 ஆண்டுகளில் தேசிய ஜனநாயக கூட்டணி அரசு நக்சலைட் தீவிரவாதத்தை பெருமளவில் கட்டுப்படுத்தி உள்ளதாகத் தெரிவித்தார்.

ஜம்மு-கஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து அளித்த அரசியல் சட்டத்தின் 370வது பிரிவு நீக்கப்பட்டதை அடுத்து அப்பகுதியில் தீவிரவாத நடவடிக்கைகள் முற்றிலுமாக கட்டுப்படுத்தப்பட்டதாகவும், இதனால் அப்பகுதியில் உள்ள மக்களுக்கு பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டு பொருளாதார ரீதியில் விரைவான வளர்ச்சி உறுதி செய்யப்பட்டதாகவும் திரு. நரேந்திர மோடி கூறினார்.

நாட்டின் எந்தப் பகுதியில் வசிக்கும் மக்களாக இருந்தாலும் அவர்களுக்கான அடிப்படை வசதிகளை பூர்த்தி செய்வதில் பிஜேபி மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகள் முனைப்புடன் செயல்பட்டு வருவதாகக் கூறினார்.

நான்கு கோடிக்கும் மேற்பட்ட மக்களுக்கு கான்கிரீட் வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளதாகவும் திரு. நரேந்திர மோடி தெரிவித்தார்.

காங்கிரஸ் மூத்த தலைவர் திரு. ராகுல் காந்தி, உத்தரப்பிரதேச மாநிலம் ஜான்சியில் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் உரையாற்றுகையில், பிஜேபி தலைமையிலான அரசு கடந்த 10 ஆண்டுகளில் விவசாயிகள் நலன்களை பாதுகாக்க தவறிவிட்டதாக குற்றம் சாட்டினார்.

இந்த மக்களவைத் தேர்தலில்தான் அரசியலமைப்புச் சட்டத்தை பாதுகாக்க வேண்டும் என்ற கோரிக்கை விரிவான அளவில் முன்வைக்கப்படுதாக அவர் கூறினார்.

அரசியலமைப்புச் சட்டம் வலுவாக இருந்தால்தான் நாட்டு மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

எந்தவொரு சக்தியாலும் அரசியலமைப்புச் சட்டத்தை அகற்ற முடியாது என்றும் அவர் கூறினார்.

கோவிட் பெருந்தொற்று காலத்தில் மருத்துவமனைகளில் போதிய அளவு வெண்டிலேட்டர்கள் இல்லாமல் உயிரிழப்பு ஏற்பட்டதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

தேசிய ஜனநாயக கூட்டணி அரசு கொண்டு வந்த சீர்மிகு நகரங்கள் திட்டத்தால் எவ்வித பயனும் இல்லை என்றும், போதிய அடிப்படை வசதிகளோ, உட்கட்டமைப்பு வசதிகளோ சீர்மிகு நகரங்களில் மேற்கொள்ளப்படவில்லை என்றும் திரு. ராகுல் காந்தி கூறினார்.

<<<<>>>>

ஆப்பிரிக்காவின் வளர்ச்சிப் பணிகளுக்கான இந்தியா – அமெரிக்கா இடையிலான பேச்சுவார்த்தை நேற்று வாஷிங்டனில் நடைபெற்றது.

இன்றும் தொடர்ந்து நடைபெறும் இந்தப் பேச்சுவார்த்தையில் ஆப்பிரிக்காவின் கட்டமைப்புகள் மற்றும் தொழில்நுட்ப ரீதியான மேம்பாட்டுப் பணிகள் ஆகியவற்றில் இந்தியாவும், அமெரிக்காவும் இணைந்து மேற்கொள்வது குறித்து ஆலோசிக்கப்பட்டது.

மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்தும் நோக்கில் வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்துவது குறித்தும், இதற்கான உதவிகளை வழங்குவது குறித்தும் விவாதிக்கப்பட்டது.

கடந்த ஆண்டு இந்தியாவின் தலைமையில் நடைபெற்ற ஜி20 உச்சிமாநாட்டில் ஆப்பிரிக்க யூனியன் நிரந்தர உறுப்பினராக இணைத்துக்கொள்ளப்பட்டதை அடுத்து ஆப்பிரிக்க யூனியனை மேம்படுத்துவது குறித்து முதல் முறையாக இந்தியாவும் - அமெரிக்காவும் ஆலோசனையை தொடங்கி உள்ளது.

<<<<>>>>

இளநிலை பட்டப்படிப்புகளுக்கான **CUET** நுழைவுத்தேர்வு, இன்று தொடங்கி சனிக்கிழமை வரை நடைபெறவுள்ளது.

இந்த தேர்வில் பங்கேற்கும் மாணவர்களுக்கான அனுமதிச் சீட்டுகள், தேசிய தேர்வு முகமையின் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

தில்லியில் உள்ள மையங்களில் தேர்வு எழுதும் மாணவர்களுக்கு மட்டும் **CUET** நுழைவுத் தேர்வுகள் இம்மாதம் 29ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தேசிய தேர்வுகள் முகமை நேற்று இது தொடர்பாக வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், தவிர்க்க முடியாத காரணங்களால் தில்லி மையங்களில் தேர்வு எழுதும் மாணவர்களுக்கு மட்டும் **CUET** தேர்வு ஒத்திவைக்கப்படுவதாக தெரிவித்துள்ளது.

இவர்களுக்கு மறு அனுமதிச்சீட்டு தேர்வு நடைபெறும் நாளன்று வழங்கப்படும் என்று அது தெரிவித்துள்ளது.

தில்லி மையங்களைத் தவிர மற்ற மையங்களில் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட கால அட்டவணையின்படி தேர்வுகள் நடைபெறும் என்றும் தேசிய தேர்வுகள் முகமை அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

இந்தியா – நார்வே தூதரக அதிகாரிகளுக்கு இடையிலான பேச்சுவார்த்தை நேற்று புதுதில்லியில் நடைபெற்றது.

இது தொடர்பாக வெளியுறவுத்துறை அமைச்சகம் நேற்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், நீடித்த வளர்ச்சிக்கு நீலப்பொருளாதாரத்தை மேம்படுத்துவது, கடல்சார் தொழில்கள் மற்றும் பாதுகாப்பில் ஒத்துழைப்பு ஆகியவை குறித்து விவாதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, சோலார் மற்றும் காற்றாலை திட்டங்கள், விண்வெளி ஆராய்ச்சி ஆகியவற்றில் இந்தியாவும், நார்வேயும் இணைந்து செயல்படுவதற்கான வாய்ப்புகள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

<<<<>>>>

மாணவர்களின் செயல்திறனையும், ஆற்றலையும் ஊக்குவிக்கும் நோக்கில் **India Skills** திறன் போட்டிகள் இன்று புதுதில்லியில் தொடங்குகிறது.

30 மாநிலங்கள் மற்றும் யூனியன்பிரதேசங்களைச் சேர்ந்த தொள்ளாயிரத்துக்கும் மேற்பட்ட மாணவ – மாணவியர் இப்போட்டிகளில் கலந்துகொள்கின்றனர்.

61 வகையான பாரம்பரிய கைவினைத் திறன் மற்றும் நவீன அறிவியல் தொழில்நுட்ப திறன்கள் ஆகியவற்றை வெளிப்படுத்தும் வகையில் இப்போட்டிகள் நடைபெறுகின்றன.

47 போட்டிகள் தில்லியிலும், 14 போட்டிகள் கர்நாடகா, ஹரியானா, உத்தரப்பிரதேசம், குஜராத் மாநிலங்களிலும் நடைபெற உள்ளது.

ட்ரோன் படப்பிடிப்பு, ஜவுளித் தொழில்நுட்பம், தோல்பொருட்கள் உற்பத்தி உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் இப்போட்டிகள் நடைபெறுகின்றன.

இதில் வெற்றி பெறுபவர்கள் பிரான்ஸ் நாட்டின் **Lyon** நகரில் நடைபெறும் உலக அளவிலான திறன் போட்டிகளில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவார்கள்.

இப்போட்டிகளில் 70 நாடுகளைச் சேர்ந்த ஆயிரத்து 500 போட்டியாளர்கள் கலந்துகொள்வார்கள்.

<<<<>>>>

ஆப்பிரிக்கா மற்றும் தென் அமெரிக்க நாடுகளுக்குச் செல்பவர்கள் அரசு மருத்துவமனைகளில் மஞ்சள் காய்ச்சலுக்கான தடுப்பூசி போட்டுக்கொண்டால் மட்டுமே விமான நிலையங்களில் அனுமதி அளிக்கப்படுவதாக தமிழக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

சென்னை கோட்டூர்புரத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கிண்டி கிங் இன்ஸ்டிடியூட் மற்றும் துறைமுக மருத்துவமனைகளில் இநத் தடுப்பூசி போடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக கூறினார்.

<<<<>>>>

இந்திய கடலோர காவல்படை சார்பில் மண்டல அளவிலான மாசுக் கட்டுப்பாட்டு இயக்கம் திங்கட்கிழமை தொடங்கி இன்று வரை நடைபெறுகிறது.

கடலோர காவல்படையினர், எண்ணெய் நிறுவனங்கள், தமிழக பேரிடர் மேலாண்மை ஆணையம், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், சென்னை மாநகராட்சி ஆகியவை இணைந்து மாசு அகற்றி தூய்மைப்படுத்தும் பணியை மேற்கொண்டு வருகின்றன.

எண்ணெய் கசிவினால் கடல்வாா் உயிரினங்களுக்கு ஏற்படும் பாதிப்பை தடுக்கும் நோக்கில் பல இடங்களில் மாசு அகற்றும் பணி கப்பல் மற்றும் இயந்திரங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டது.

அடுத்தகட்டாக இன்று தொடங்கி வரும் 24ஆம் தேதி வரை சென்னை மாநகராட்சி மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம் மற்றும் மாநிலத்தில் உள்ள பிற அமைப்புகள் இணைந்து தூய்மைப் பணியை மேற்கொள்கின்றன.

<<<<>>>>

சத்தீஸ்கர் மாநிலம் **Bijapur** மாவட்டத்தில் 30 மாவோயிஸ்ட்கள் தங்களது ஆயுதங்களை ஒப்படைத்து பாதுகாப்புப் படையினரிடம் சரணடைந்துள்ளனர்.

சரணடைந்தவர்களில் 9 பேரை பிடிப்பதற்கு 39 லட்சம் ரூபாய் சன்மானம் அறிவிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

இவ்வாண்டு ஜனவரி மாதத்தில் இருந்து இதுவரை 180 மாவோயிஸ்ட்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். 76 பேர் சரணடைந்துள்ளனர்.

<<<<>>>>

கஜகஸ்தானில் நடைபெறும் **Elorda** கோப்பைக்கான குத்துச்சண்டைப் போட்டியில் இந்தியாவின் கவுரவ் சௌஹான் 92 கிலோ எடைப்பிரிவில் அரை இறுதிக்கு முன்னேறியுள்ளார்.

நேற்று நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் அவர், கஜகஸ்தானின் **Danial Saparbay**-யை 3-2 என்ற புள்ளிக் கணக்கில் தோற்கடித்தார்.

இன்று நடைபெறும் காலிறுதி சுற்றுகளில் இந்தியாவின் **Pawan Bartwal, Varinder Singh, Abishek Yadav, Hites** ஆகியோர் பங்கேற்கின்றனர்.

<<<<>>>>

மகளிர் டேபிள் டென்னிஸ் உலக தரவரிசையில் இந்தியாவின் மணிகா பத்ரா 24வது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

கடந்த வாரம் நடைபெற்ற சவுதி ஸ்மேஷ் போட்டியில் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து தரவரிசையில் முதல் 25 இடங்களுக்குள் அவர் முன்னேறி இருப்பது குறிப்பிடத்தக்கது.

<<<<>>>>

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் தில்லி அணி - லக்னோ அணியை 19 ரன் வித்தியாசத்தில் வென்றது.

நேற்றிரவு புதுதில்லியில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் களமிறங்கிய தில்லி அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 208 ரன் எடுத்தது.

209 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய லக்னோ அணி, 20 ஓவரில் 9 விக்கெட் இழப்புக்கு 189 ரன் மட்டுமே எடுத்து தோல்வியடைந்தது.

தில்லி அணி 14 புள்ளிகளுடன் 5வது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

லக்னோ அணி 12 புள்ளிகளுடன் 7வது இடத்தில் உள்ளது.

இனிவரும் போட்டிகளில் கிடைக்கும் புள்ளிகளைப் பொறுத்தே இந்த இரு அணிகளும் பிளேஆஃப் சுற்றுக்கு தகுதி பெறுவதற்கான வாய்ப்பு கிடைக்கும்.

ஐ.பி.எல். கிரிக்கெட்டில் இன்றிரவு ஏழரை மணிக்கு குவஹாத்தியில் நடைபெறும் ஆட்டத்தில் ராஜஸ்தான் மற்றும் பஞ்சாப் அணிகள் மோதுகின்றன.

**<<<<>>>>**

பெல்ஜியம் நாட்டின் **Antwerp** நகரில் நடைபெறும் **FIH** சர்வதேச ஹாக்கி ப்ரோ லீக் போட்டிகளில் விளையாடுவதற்காக இந்திய அணி புறப்பட்டுச் சென்றது.

ஜூலை மாதம் நடைபெற உள்ள பாரீஸ் ஒலிம்பிக் போட்டிகளுக்கு தங்களைத் தயார்படுத்திக்கொள்ள இது ஒரு நல்ல வாய்ப்பாக அமையும் என்று இந்திய ஹாக்கி அணியின் கேப்டன் ஹர்மன்ப்ரீத் சிங் கூறினார்.

இம்மாதம் 22ஆம் தேதி அர்ஜென்டினாவுடன் இந்திய அணி முதல் போட்டியில் விளையாட உள்ளது.

**<<<<The End>>>>**